10th September 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : தனிக் கேள்வி வேண்டும்.

SRI R. SRINIVASA IYER : கனம் ஜாஸ்தியாக இருக்கிற உப்பின் தரம் உயர்வாக இருக்கிறது என்றார்கள். தூத்துக்குடி உப்பு வெள்ளை வெளேர் என்று படியில் அளக்கும்போதும் குறைவாகவே இருக்கிறது. அது உயர்ந்த தரம் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் நண்பர் சொல்வதை விஞ்ஞான ரீதியில் ஒப்புக்கொள்ள முடியாது. 96 சத விகிதம் சோடியம் க்ளோரேட் உள்ள உயர்ந்த ரக உப்பு கனமாகத்தான் இருக்கும்.

Slums

* 75-J *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the central grant (i) allotted (ii) actually paid to Madras State Government towards slum clearance in the years 1956–57, 1957–58, 1958–59; and

(*b*) whether the allotted amounts were fully utilized, and if not, the amount surrendered in the respective years?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Apparently the member refers to the loans and subsidies sanctioned by the Central Government for Slum Clearance Schemes in the State under the Second Five-Year Plan.

No allotment was made by the Central Government for 1956–57. However, the first loan instalment of Rs. 82,750 was sanctioned by the Central Government towards the cost of an approved scheme in that year, and this has been drawn.

An allotment of Rs. 15 lakhs was made by the Central Government for the year 1957–58, out of which loans amounting to Rs. 11·34 lakhs and a subsidy of Rs. 59,750 were drawn, leaving a balance of Rs. 3·06 lakhs.

For 1958–59, an allotment of Rs. 42·50 lakhs that is, a loan of Rs. 25 lakhs and a grant of Rs. 70·50 lakhs, has been made. So far, a loan of Rs. 74,687 has been drawn. The balance of the allotment will be drawn in the course of the year.

Raw Film Factory

* 80 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கொடைக்கானலில் கச்சா பிலிம் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க மத்திய சர்க்காருக்கு சென்னை சர்க்கார் ஏதாவது சிபாரிசு செய்திருக்கிறார்கள். ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI N. R. THIAGARAJAN : கொடைக்கானலில் வெள்ளையர்கள் காலத்தில் குடியேறியுள்ள ஆயிரக்கணக்கான பேர்கள் இப்போது வேலை இல்லாமல் இருக்கிறார்கள். கச்சா பிலிம் தொழிற்சாலை ஒன்றை நிறுவாவிட்டாலும், வாட்டில் பார்க் மரங்கள் கிடைப்பதால் ரயான் செயற்கைப் பட்டு பாக்டரியையாவது சர்க்கார் ஏற்படுத்துமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தனியார் துறையில் யாராவது முன்வந்தால் சர்க்கார் எல்லாவிதமான உதவியையும் செய்யும்.